தமிழ் நாடு
திங்களிதழ்
இதழ் - 17
தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல்
நன்கொடை உரு.10

# தேர்தலில் பாஜக தோல்வியடைந்தால் மட்டும் போதாது.. ஆரியப் பார்ப்பனிய அதிகாரங்களும் கருத்துகளும் துடைத்தெறியப்படவேண்டும்

**சனாதன வெறித்தனம்.. சமஸ்கிருத, இந்தி அதிகாரப் போக்குகள்..**
**வருணாசிரமத் திமிர்.. ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பு..**
**சாதிகளின் ஆணவப் போக்கு.. சுங்கச் சாவடி பெயரில் சாலை வழிப்பறிக் கொள்ளை..**
**ஜி. எஸ். டி. சூறையாடல்கள்.. மாநில உரிமைகள் பறிப்பு.. பொதுத்துறை அழிப்பு...**
**ஆளுநர் அமைப்பு முறை அனைத்தும் முற்றும் முழுமையாகத் தடைசெய்யப்பட வேண்டும்..**
**முற்றதிகாரம் படைத்த மாநிலங்களின் ஒன்றியமாக மட்டுமே இந்திய அரசு இருக்க வேண்டும்..**

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவை என்பது தேவையற்றது; மாநிலங்களவை மட்டுமே போதுமானது. அதனால் நாடாளுமன்றத்திற்கான தேர்தல்கள் மொழித்தேச மாநிலங்களுக்குள் நேரடியாக நடத்தப்படாமல், மொழிவழித் தேசச் சட்டமன்றங்களில் இருந்து தேர்வு செய்யப்படுவோர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதாக இருக்கும்படியான முறையே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வகை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அளவில் இருக்கக்கூடிய எல்லா மொழித்தேசங்களுக்கும் ஒரே எண்ணிக்கையில் இருந்திடல் வேண்டும் ...

தமிழ்நாட்டிற்குரிய நீதித்துறையில் தமிழ்நாட்டின் உயர்நீதிமன்றமே உச்சநீதிமன்றமாக இறுதி செய்யப்படவேண்டும். அதேபோல் தமிழ்நாட்டின் தலைமைச் செயலகம், காவல்துறை உள்ளிட்ட அதிகாரங்கள் உச்சநிலை அதிகார இடங்களாகவும் இறுதி செய்யப்படவேண்டும்...

தமிழ்நாட்டில் கங்காணியாகச் செயல்படும் ஆளுநர் என்கிற அதிகார முறை ஒழிக்கப்பட்டு, அதன்மூலம் ஆளுநர் மாளிகைகள் என்கிற பெயரில் தமிழகக் கிண்டி மாளிகையிலும், உதகை ஆளுநர் மாளிகையிலும் வீணாய் செலவு செய்யப்பட்டு வரும் பல ஆயிரம் கோடி ரூபாய் தொகையையும் தமிழ்நாட்டு நலனுக்காகத் தமிழக அரசு பயன்படுத்திடல் வேண்டும் ...

நெய்வேலி நிலக்கரி, நரிமணம் கன்னெய் (பெட்ரோல்), சேலம் இரும்பு உள்ளிட்ட தமிழ்நாட்டுக் கனிமவளங்களின் (எடுத்தல், உடைமை, பகிர்வு) அனைத்து அதிகாரங்களும் தமிழ்நாட்டு அரசிடமே இருத்தல் வேண்டும்...

ஒவ்வொரு மொழிவழித் தேசங்களும் தங்களுக்கெனக் காவல்துறை வைத்திருப்பதுபோல், படைத்துறையையும் அதனதன் அதிகாரங்களுக்கு உட்பட்ட நிலையில் வைத்துக்கொள்வதே தேவையானது. அவ்வகையில் தமிழ்நாட்டிற்கும் படைத்துறை தேவையானதாகிறது. தேவைப்படும் காலத்தில் மட்டுமே அவை ஒன்றிய அளவில் ஒருங்கிணைந்து செயல்படும் சூழல் உருவாக்கப்படவேண்டும் ... - என்கிற அளவில் மாநிலங்களின் உரிமைகளைத் தமிழக மக்கள் முன்னணி முன்மொழிந்து வலியுறுத்துகிறது.

## குமரியில் திருவள்ளுவர் சிலைக்குக் கடற்கரையிலிருந்து தனியே பாலம் அமைத்திட வலியுறுத்தித் திருக்குறள் ஆர்வலர்கள், தமிழறிஞர்களால் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது..

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்குக் கடற்கரையிலிருந்து தனியே பாலம் அமைத்திட வலியுறுத்தித் திருக்குறள் ஆர்வலர்கள், தமிழறிஞர்களால் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையைத்..திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் ஐயா கி. வீரமணி அவர்களிடமும்.. விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தோழர் தொல். திருமாவளவன் அவர்களிடமும்.. இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் முத்தரசன் அவர்களிடமும்.. மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் கே.பாலகிருட்டிணன் அவர்களிடமும்.. திருக்குறள் பேரவையம் சார்பில்.. தென்மொழி ஆசிரியர் முனைவர் மா பூங்குன்றன், கல்லக்குறிச்சி புலவர் ஐயா மோகன், தமிழியக்கம் பொதுச்செயலாளர் திரு.மு சுகுமாரன், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் வாலாசா வல்லவன், தமிழ்த் தேச நடுவத் தோழர் பாவேந்தன் ஆகியோருடன் தமிழக மக்கள் முன்னணி சார்பில் பொழிலனும் சென்று பேசி வலியுறுத்தினோம்.. அவர்களும் வலியுறுத்துவதாகக் கூறினர்..







# பற்றி எரிகிறது மணிப்பூர்... மொழி இனத் தேசங்களை அழிக்கிறது இந்திய அரசு... வடகிழக்கு மாநிலப் பழங்குடியின மக்கள் கொத்துக் கொத்தாகச் சாகடிக்கப்படுகின்றனர்...

.. அறி மண் ..

அம்பேத்கர், பெரியார், காமராசர் ஆகியோரை மாணவர்கள் படிக்க வேண்டும் என்று சொன்ன நடிகர் விஜயை இந்த ஊடகங்கள் முதன்மைப்படுத்துகிறது.

அமைச்சர் செந்தில் பாலாஜி கைது, தமிழக பாஜக நபர் கைதைக் கண்டிக்கும் நிர்மலா சீதாராமன், ராஜ்நாத் சிங், அமெரிக்கா செல்லும் மோடி இவர்களைப் பற்றி வாய் கிழிய பேசும் இந்திய ஊடகங்கள்.. 'பற்றி எரியும் மணிப்பூர் மாநிலம்' பற்றி மோடியைப் போல் வாய் மூடி மௌனமாய் வேடிக்கை பார்க்கின்றன.

உலக ஓக நாளில் உலகம் எங்கும் ஓகத்தைப் பரப்பத் துடிக்கும் ஊடகங்கள் மற்றும் பாஜகவினர், அதே நாளில் மணிப்பூரில் இந்து மைத்தி மக்கள், பாதுகாப்புப் படையினர், காவல் படையினர் இணைந்து நடத்தும் மனிதத் தன்மையற்ற காட்டு மிராண்டி தாக்குதலை யார் வெளியே கொண்டு வருவது?

சொந்த மண்ணில் பல நூறு கிராமத்தினர் காட்டுக்குள் ஓடி ஒளிந்துகொண்டிருப்பதை ஆளும் பாஜக அரசு கண்டும் காணாமல் இருப்பது வியப்பல்ல.

அங்கு 11 மாவட்டங்களில் ஊரடங்கு ஆணை அமுலில் உள்ளது. இணைய சேவை நிறுத்தப்பட்டுள்ளது. மணிப்பூர் தலைநகர் இம்பாலில் உள்ள வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ராஜ்குமார் ரஞ்சன் சிங்கின் வீடு முழுமையாக எரிக்கப்பட்டுள்ளது. மணிப்பூர் பாஜக அரசின் அமைச்சர் நெம்சா கடுமையாகத் தாக்கப்பட்டு வீடு எரிக்கப்பட்டுள்ளது. மணிப்பூரின் பொதுப்பணித்துறை அமைச்சர் கோவிந்த தாஸ் வீடு தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

மற்றொரு அமைச்சர் பிஸ்வாஜித் வீடும் தாக்கப்பட்டது. பாஜக சட்டமன்ற உறுப்பினர் வால்டே கடுமையாகத் தாக்கப்பட்டு டெல்லியில் சிகிச்சை பெற்று வருகிறார். இம்பால் நகரமே சிதைந்து போய் உள்ளது.

இந்த வன்முறைச் சம்பவத்தில் அதிக எண்ணிக்கையில் உள்ள ஒரு சமூகத்தைச் சேர்ந்த மக்களிடையே குடியேறிய மற்றொரு சமூகத்தினர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.


நாக்பூர் கும்பல் மணிப்பூரில் நடத்தும் இந்த மத வெறி வன்முறையை உடனே நிறுத்த வேண்டும். ஒட்டுமொத்த மணிப்பூர் மக்களும், ஆளும் பாஜக அரசின் மேல் கடும் கோபத்தில் உள்ளனர். பாஜக ஆட்சிக்கு வந்த பிறகுதான் இப்படிப்பட்ட கலவரம் திட்டமிட்டு நடத்தப்படுகிறது என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

அசாம், மேகாலயா, நாகலாந்து, மணிப்பூர், அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், திரிபுரா ஆகிய ஏழு மாநிலங்கள் ஏழு சகோதரிகள் என்று அழைக்கப்படுகிறது. பின்னர் இவற்றோடு சிக்கிமும் இணைந்துகொண்டது.

19ஆம் நூற்றாண்டில் வடகிழக்கு மாநிலங்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தபோது, அப்பகுதியில் நெருங்க முடியாத மலைப்பகுதியில் பழங்குடிகள் அவர்களுக்கென இன குழுக்களாகப் பிரிந்து, அந்த இன குழுக்களின் தலைவர்களைக் கொண்டு அவர்களின் கலாச்சாரப் பண்பாட்டோடு தங்கள் ஆட்சியை அமைத்துக் கொண்டனர்.

மேற்குத் தொடர்ச்சி மலை, இலங்கை, மலேசியா போன்ற இடங்களில் தேயிலைத் தோட்டத்தில் பணியாற்ற ஒடுக்கப்பட்ட எளிய தமிழர்களை ஆங்கிலேயர்கள் அழைத்து சென்றது போலவே, வடகிழக்கு மாநிலங்களில் தேயிலைத் தோட்டத்தில் பணியாற்ற பீகார், உத்தரப்பிரதேசத்தில் இருந்து உழைக்கும் எளிய மக்களை அழைத்துச் சென்றனர். வங்காளத்தில் இருந்தும் இஸ்லாம் மதத்தைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றும் இவர்களை நிர்வாகம் செய்ய அன்றைக்கு அதிகம் படித்தவர்களாக இருந்த வங்காளிகளைப் பணியமர்த்தினர்.

இந்நிலையில் ஆங்கிலேயர்களின் ஒரு பகுதியினர் மலைப்பகுதியில் உட்பகுதிக்கு சென்று நாக, மிசோர மக்களுக்கு கல்வி அறிவு கொடுத்தனர். இந்த மக்களும் தங்கள் அடிமைத் தனத்தை உணர்ந்து விடுதலை பெற தங்களுக் கென தனி நாடு கேட்டுப் போராட்டங்கள் நடத்த ஆரம்பித்தனர். மறுபுறம் மணிப்பூர் திரிபுரா அரச குடும்பத்தினர் தங்களை இந்தியாவுடன் இணைத்துக் கொள்ள விரும்பினர். இந்திய விடுதலைக்குப் பின் அசாம் பகுதி அசாம், நாகலாந்து, அருணாச்சலப்பிரதேசம் என மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. பின்னர் மணிப்பூரும், திரிபுராவும் அடுத்து சிக்கிமும் தனி மாநிலமாகப் பிரிக்கப்பட்டன.



1963 வரை வடகிழக்கு மாநிலங்கள் அனைத்தும் அசாம் மாநிலம் என்றுதான் அழைக்கப்பட்டது. நாகா இன மக்களின் விடுதலைப் போராட்டம் காரணமாக நாகலாந்து மாநிலம் உருவானது. பின்னர் ஒவ்வொரு தேசிய இனமும் தனி நாடு கேட்டுப் போராடியதன் விளைவாகத் தனித்தனி மாநிலங்கள் பெறப்பட்டன.



**அசாம்**

மியான்மரில் இருந்த அசாம் பகுதியைப் பிரித்து இந்தியாவுடன் இணைத்தது. ஆங்கிலேய அரசு. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வங்காளத்தைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் பெருமளவில் அசாமில் குடியேறினர். விடுதலைக்குப் பின் ஏற்பட்ட மதக் கலவரத்தால், இந்து வங்காளிகள், அசாமின் பூர்வ குடிகளான போடோ இன மக்களுக்கு அச்சமூட்டும் வகையில் அசாமில் குடியேறினர். இந்தியாவின் துணையோடு வங்காள தேசம் தனி நாடாக அமைந்தாலும், அசாமுக்குள் குடியேறிய வங்காளிகள் அங்கேயே தங்கிவிட்டனர்.

தனி நாடு கேட்டு 1987இல் அனைத்து போடோ மாணவர் சங்கம் அமைக்கப்பட்டது. 1993-இல் பல ஒடுக்குமுறைக்குப் பின் போடோலாந்து கோரிக்கை நீர்த்துப் போகும் வகையில் மிகக் குறைந்த அளவு உரிமைகள் கொண்ட தனி மாநில ஒப்பந்தம் உருவானது இதை ஏற்றுக் கொள்ளாமல் போடோ விடுதலைப்புலிகள், போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி ஆகிய அமைப்புகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டன. 2003இல் போடோ விடுதலைப்புலிகள் அமைப்புடன் ஒப்பந்தம் ஏற்பட்டு போடோ தன்னாட்சி உரிமை பெறப்பட்டது. ஆனாலும் வங்காளிகளின் குடியேற்றமும், நில ஆக்கிரமிப்பும் மேலோங்கின. அசாமில் சரிபாதி நிலத்தில் வங்காளிகள் பெரும்பான்மை ஆயினர். வாக்கை மட்டுமே நோக்கமாகக் கொண்ட காங்கிரஸ் அரசு அதைப்பற்றி கவலைப்படவே இல்லை. போடோ மக்களின் தாய் நிலம் வங்காள மக்களின் தாய் மண்ணாக மாறிக்கொண்டிருந்தது.

**நாகலாந்து**

ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் நாகலாந்தைக் கொண்டு வர ஆங்கிலேயர்கள் தங்கள் ஆயுதத்தால் நாகா மக்களை முறியடித்து இந்தியப் பகுதியில் இணைத்தனர். பெரும் நிலப்பரப்பு கொண்ட நாகலாந்தின் சரி பாதி அளவு மியான்மரிலும், மீதியளவு இந்தியாவுடன் நாகலாந்து மாநிலமாக இணைக்கப்பட்டது. பல்வேறு குழுக்களாக இருந்த நாகா மக்கள் ஒன்றிணைந்தனர்.

1946இல் நாகா மக்களுக்கான அமைப்பு NNC ( Naga National Council ) தங்களை இந்திய ஒன்றியத்துடன் இணைக்க வேண்டாம் என்று கேட்டனர். 1947 ஜூலை 19 காந்தியுடன் நடந்த பேச்சு வார்த்தையில் தங்களைத் தனி நாடாகக் கருத வேண்டும் என கேட்டுக் கொண்டதற்கு இணங்க காந்தியும் அதை ஏற்றுக்கொண்டார். இந்தியா விடுதலை பெற்ற பிறகும் நாகலாந்து தனி நாடாகவே இருந்தது. 1958க்கு பிறகு நேரு தன் இராணுவ நடவடிக்கையால் மிகப் பெரும் வன்முறையைக் கட்டவிழ்த்து அட்டூழியங்கள் நடத்தி நாகலாந்தை, நாகலாந்து, மணிப்பூர், அருணாச்சலப்பிரதேசம், அசாம் என உடைத்தார்.

**மணிப்பூர்**

நேரு அவர்கள் வடகிழக்கு மாநிலங்களைப் பிரிக்கும்போது அந்தந்த தேசிய இனத்தின் வழியாகப் பிரிக்காமல் சூழ்ச்சியுடன் பெரும்பான்மைத் தேசிய இனங்களை உடைத்து மாநிலங்களை பிரித்தார். இந்திய எல்லைக்குள் இருந்த பெரும்பான்மை சமூகங்களான நாகா, மிசோ, மைத்தி ஆகியவற்றை அந்தந்த தேசிய இனங்களாகப் பிரிக்காமல் நாகர்கள் வாழும் பகுதியைத் தனி நாகலாந்தாக அறிவிக்காமல் அசாம், மணிப்பூர் அருணாச்சல பிரதேசம் ஆகியவற்றில் இருக்குமாறு பிரித்தார்.

மணிப்பூர் மாநிலம் மைத்தி, நாகா, குக்கி இனங்களையும் இணைத்துப் பிரிக்கப்பட்டது. அதிலும் மணிப்பூர், மியான்மர் எல்லையில் உள்ள மணிப்பூரின் வனப்பகுதி மியான்மருடன் இணைக்கப்பட்டது. அங்கு வாழ்ந்து வந்த குக்கி இன மக்கள் மியான்மரிலேயே தங்கிவிட்டனர்.

மணிப்பூர் மக்கள் தொகையில் பழங்குடி அல்லாத மைத்தி இனம் மக்கள் 53 விழுக்காட்டினரும், குக்கி, நாகா உள்ளிட்ட பிற அனைத்துப் பழங்குடியினர் 40 விழுகாட்டளவிலும் இருந்தனர்.

மணிப்பூர் நிலத்தின் மையப் பகுதி சமவெளியாகவும், சமவெளியைச் சுற்றியுள்ள பகுதி வனம் சார்ந்த மலைப்பகுதியாகவும் அமைந்துள்ளது. இந்த சமவெளிப் பகுதி முழுவதும் மைத்தி இன மக்களும், காடுகளில் குக்கி நாகா மற்றும் பல்வேறு பிற பழங்குடியின மக்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆங்கிலேயர் ஆட்சியில் சமவெளிப் பகுதியில் வாழ்ந்த மைத்தி இன மக்கள் கல்வி அறிவு பெற்று அதன் வழியே அம்மக்கள் வேலை வாய்ப்புகளிலும், நில உடைமையிலும், விவசாயத்திலும், சமூகப் பொருளாதார நிலையிலும் மேலோங்கி இருந்து வருகின்றனர்.

மைத்தி இன மக்கள் பெரும்பான்மையினர் இந்துக்கள். மலைப்பகுதியில் வாழும் குக்கி, நாகா மற்றும் பிற பழங்குடியின மக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள். ஆனாலும் கல்வியறிவிலும், சமூகப் பொருளாதார நிலைகளிலும் பின்தங்கி எளிய நிலையில் உள்ளனர். சமவெளிப் பகுதியில் வாழும் பழங்குடியல்லாத மைத்தி இன மக்கள் பழங்குடியினர் வாழும் மலைப்பகுதியில் நிலம் வாங்கவும் முடியாது, வனப் பகுதியில் தங்களுடைய வாழ்வை அமைத்துக் கொள்ளவும் முடியாது. இந்திய விடுதலைக்கு முன் மைத்தி இன மக்களும் பழங்குடியின பட்டியலில் இருந்ததாக அவர்கள் தரப்பு வாதமாக இருக்கிறது.

2017 ஆம் ஆண்டு பாஜக மணிப்பூர் மாநிலத்தில் ஆட்சியைப் பிடித்ததில் இருந்து அங்கு இந்து - கிறிஸ்தவர் பிரிவினை ஏற்படுத்தி இந்து மைத்தி மக்களின் வாக்குகளை வைத்து அரசியல் நடத்தி வருகின்றனர். தேர்தல் வாக்குறுதியிலும் மைத்தி இன மக்களை பழங்குடியினர் பட்டியலில் இணைப்பதாக உறுதி அளித்துள்ளனர். திரிபுரா, அருணாச்சலப் பிரதேசம், அசாம், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் தற்போது பாஜக நேரடியாக ஆட்சியில் இருக்கிறது. மற்ற பிற வட கிழக்கு மாநிலங்களில் கூட்டணி ஆட்சியில் பாஜக உள்ளது. மணிப்பூரில் 60 சட்டமன்ற உறுப்பினர்களில் 40 பேர் மைத்தி இனத்தினரும், மீதி 20 பேர் குக்கி, நாகா மற்றும் பிற பழங்குடியினர் மக்களைச் சார்ந்தவர்களாக உள்ளனர். இதுவரை ஆட்சி செய்த 12 முதல்வர்களில் 10 பேர் மைத்தி இனத்தினராகவும், இரண்டு பேர் மட்டுமே பழங்குடியினராகவும் இருந்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் மோடி அரசு வனப் பாதுகாப்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்தது. அதில் ஒன்றிய அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு வனப்பகுதியை மாநில அரசு தனியாருக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

சர்வதேச எல்லையில் ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்புள்ள காடுகளைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் எனத் திருத்தம் கொண்டு வந்தது. இந்தத் திருத்தத்தால் பாதிக்கப்பட்டது குக்கி இன மக்களே. காரணம் மணிப்பூர் மியான்மர் எல்லையில் வசிப்பது குக்கி இன மக்களே. இந்தப் பகுதி சர்வதேச எல்லையாக இருப்பதால் ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள காடுகளைப் பாதுகாக்க.. நூற்றுக்கணக்கான கிராமங்களை அகற்றி வருகின்றனர். இங்குள்ள ராணுவத்தினர் மியான்மர் பகுதியில் இருந்து பல்வேறு காரணங்களால் மணிப்பூருக்கு குடிபெயரும் குக்கி இனமக்களின் உறவினர்களை இங்குள்ள பாஜக அரசு தடுத்து வருகிறது. இந்நிலையில் தேர்தல் வாக்குறுதி அளித்த பாஜக அரசு மைத்தி இன மக்களை வைத்து மணிப்பூர் தலைநகரமான இம்பால் உயர்நீதிமன்றத்தில் தங்களை பழங்குடியினப் பட்டியலில் சேர்க்க மாநில அரசுக்கு உத்தரவிடக் கோரி வழக்கு தொடர்ந்தது. வழக்கம் போலவே பாஜகவுக்கு சார்பான பல்வேறு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் வழியே மணிப்பூர் உயர்நீதிமன்றமும் நான்கு வாரங்களுக்குள் முடிவெடுக்க பாஜக அரசுக்கு உத்தரவிட்டது. ஒன்றிய அரசு கள்ள மவுனம் காத்த நிலையில், மாநில பாஜக அரசு இந்து மைத்தி இனமக்களை பழங்குடியினப் பட்டியலில் சேர்க்கத் திட்டமிட்டது.

இந்நிலையில் மலைகளில் வாழும் குக்கி நாகா பழங்குடியினர் அமைப்பு சார்ந்த அனைத்துப் பழங்குடியின மாணவர் அமைப்பு தீர்ப்பை எதிர்த்து ஊர்வலம் நடத்தியது. அப்போது ஆரம்பித்த வன்முறை இன்று வரை தொடர்ந்துக் கொண்டிருக்கிறது. 50 நாட்களுக்கு மேல் நடந்து கொண்டிருக்கும் இந்தக் கலவரத்தை ஒட்டி இதுவரை எந்தக் கருத்தையும் கூறாமல், அந்த மக்களைச் சென்று பார்க்காமல் வானொலியில் மட்டுமே பேசுகின்ற இந்திய பிரதமர் மோடி, தற்போது அமெரிக்காவில் இந்தியப் பெருமை பேசிக்கொண்டு இருக்கிறார். இந்த கலவரத்தைப் பற்றி முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சசிகாந்த் அவர்கள் கூறுகிறார்,

'மணிப்பூரில் ஏற்பட்ட கலவரம் இன்றுவரை வெளியில் வராமல் இருக்கிறது. அங்கு ஓர் இன அழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. மதவாத அரசியல் நடந்தால் என்ன நடக்கும் என்பதற்கு மணிப்பூர் கலவரம் ஒரு முன்னுதாரணம். குக்கி நாகா இன மக்கள் கிறிஸ்தவர்கள் என்பதனால் இதுவரையில் 200க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் இடிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினரும், காவல்துறையினரும் சேர்ந்து கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்திக் கொன்று குவித்து வருகிறார்கள். 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காடுகளில் தஞ்சம் புகுந்து இருக்கிறார்கள். மணிப்பூர் மக்கள் ராணுவம் மற்றும் காவல் துறையினர் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்து அவர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வாக்கை மட்டுமே வைத்து அரசியல் நடத்திக் கொண்டிருக்கிற பாஜக அரசு மதவாத அரசியலை கையில் எடுத்து அதன் வழியாகப் பெரும்பான்மை சமூகமான மைத்தி இன மக்களை வென்றுவிடலாம், அவர்களின் வாக்கைப் பெற்றுவிடலாம் என்று தப்புக் கணக்குப் போடுகிறது. எதிர்காலத்தில் வடகிழக்கு மாநில மக்கள் இதற்குச் சரியான பாடம் புகட்டுவார்கள்.

## இறுதி நேரம் உனக்கிது!

இறுதி நேரம் உனக்கிது, தமிழனே!
எண்ணுவாய் எண்ணுவாய் எண்ணியே எழுவாய்!
உறுதிசெய் ! ஒன்று,நீ ஒழிந்திடல் வேண்டும்;
அல்லதுஉன் பகையை, நீ ஒழித்திடல் வேண்டும்.!
சிறுதயங் கலும்,உன் நிலையினைச் சிதைக்கும்!
சீர்த்திடும் பகைஇனும் வலுப்பெற வைக்கும் !
மறுதிசை திரும்பேல் ! மார்புக்கு நேரே
மாற்றான் துமுக்கியும் நீண்டது, பாரடா!



கட்சியைக் களைந்தெறி ! சாதியைக் கழற்று!
கணநே ரத்திலுன் மதத்தினைத் துப்பு!
முட்சிதை வுற்றே முனைவருத் துதல்போல்
முப்பது நூறாண் டொற்றுமை யின்றி
உட்சிதை வுற்றஉன் இனத்தினை ஒன்றுசேர் !
உருட்டு விழிகளை ! உன் பகை தூள் தூள்!
வெட்சிப் பூவணி ! வேகப் படு,நீ !
வெற்றி முரசினை அதிர முழக்கியே !

நரிமையை நாய்மையை நையப் புடைத்திடு!
நமக்குள் வேர்விடும் வஞ்சரை நசுக்கு!
அரிமாப் போத்தே ! அடர்வெம் புலியே!
ஆரடா உனையெதிர்த் தாளுமை செய்பவர்?
உரிமையை மீறிய ஒருவளம் இல்லை!
உள்ளம் நாறிடும் கீழ்மைக்குத் தீவை!
எரிமேல் இருந்துன் சூளுரை முழக்கு!
எங்கள் தமிழ்நிலம் எங்களுக் கென்றே! - 1986

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்..**

| | |
|---|---|
| தோழர் அறிமண் | 1000 |
| தோழர் ஆற்றல் | 300 |
| திரு. தென்முகநம்பி | 500 |
| அரக்கோணம் வட்டம் சாலையில் ஐயா கலைநேசன் தலைமையில் தோழர் பொழிலன் நடத்தி வைத்த இணையர்கள் தமிழரசன், கனிமொழி மணநிகழ்ச்சிக்காகத் தமிழ்நாடு இதழுக்கு அன்பளிப்பு | 1000 |

**பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் தமிழ்கூர் நல்லுலகும்**

கருத்தரங்கம்

ஈரோடு
பெரியார் மன்றத்தில்..
சூலை 2, ஞாயிற்றுக்கிழமை
மாலை 5 மணிக்கு..

— தமிழக மக்கள் முன்னணி - மேற்கு மண்டலம்

## பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவேந்தல் நிகழ்ச்சிகள்...




பாவலரேறு தமிழ்க்களத்தில் கடந்த சூன் 11 ஆம் நாள் திரு. இறை. பொற்கொடி அவர்கள் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சியில்.. திரு. மா பிறைநுதல் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிட, சொல்லாய்வறிஞர் அருளியார், முனைவர் மா பூங்குன்றன் (தென்மொழி ஆசிரியர்), துரை. சந்திரசேகரன் (தி.க.), வாலாசா வல்லவன்( மா. பெ. பொ. க), பேராசிரியர் செயராமன் (த. த. இ), நிலவன் (நீரோடை), நிலவழகன் (ம. த. க), செ. ப. முத்தமிழ்மணி (த. தே. மு), சீராளன் (பு. இ. மு), பாவெல்(இ. இ. மா. இ. இ.), முனைவர் குணத்தொகை(பா பை க க), பொழிலன் (த ம மு) ஆகியோர் உரையாற்றினர்.



சென்னை, முத்தமிழ் அரங்கத்தில் இறையகம் சார்பில் நடந்த நிகழ்ச்சியில்.. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் சிறிய அளவிலான படிமம் தோழர் தொல் திருமாவளவன் அவர்களால் வெளியிடப்பெற்றது.. சொல்லாய்வறிஞர் அருளியார், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராசா, வழக்கறிஞர் அருள்மொழி, திரு. மல்லை சத்யா, சட்டமன்ற உறுப்பினர் வேலு, சிங்கராயர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.. தோழர் திருமலை தமிழரசன் தலைமையில் திருவாளர்கள் இறை, பொற்கொடி, அங்கயற்கண்ணி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினர்..

# நீட் பயிற்சி வாய்ப்புகள் அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைக்கின்றனவா?

பு. பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு
பொதுப் பள்ளிக்கான மாநில மேடை

2023 "நீட்" தேர்வு முடிவுகளின்படி முதல் முயற்சியிலேயே மொத்த மதிப்பெண்களான 720க்கு 720 எடுத்து தேசிய அளவில் முதலிடம் பிடித்துள்ளார் விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருகே உள்ள மேல்ஓலக்கூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவர். அவருக்கு நம் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்.

முதலிடம் பிடித்த மாணவர் விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் உள்ள மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்புவரை படித்துள்ளார்.

சென்னை முகப்பேரில் உள்ள மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், பிளஸ் 1, பிளஸ் 2 படித்துள்ளார். சென்னை முகப்பேரில் உள்ள நீட் பயிற்சி மையத்தில் நீட் பயிற்சியும் பெற்றுள்ளார் என்று நாளிதழ்களின் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிராமப் பகுதியில் வாழும் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், இந்த மாணவருக்கு நவீன வசதிகளுடன், அனைத்து ஏற்பாடுகளும் செய்து தந்து, பாடப்புத்தகங்களில் மட்டுமே அவர் கவனம் செலுத்தும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி முதல் இரவு 11 மணி வரை, தான் பயிற்சி மேற்கொண்டதாக மாணவர் தெரிவிக்கின்றார். அத்தகைய கடுமையான பயிற்சி மேற்கொள்வதற்கு ஏற்ற சூழலை (support system) ஏற்படுத்தித் தரும் அளவிற்கு அவரின் பெற்றோருக்கு வசதிகளும், வாய்ப்புகளும் அமைந்துள்ளன.

இதே போன்ற வாய்ப்புகள் அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைக்கின்றனவா? என்ற கேள்வி நம்முன் எழுகிறது.

இவ்வாறு குழந்தைகளை மிகப் பெரும் பதற்றத்தில் இயங்க வைப்பது நியாயமா? குழந்தைகளின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உறுதிதரும் நமது இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு இவை ஏற்புடையதா? நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குழந்தைகளை குழந்தைகளாகப் பார்க்காமல் நுகர்வோராக, மதிப்பெண் பெறும் கருவிகளாகக் கருதுவது ஏற்புடையதா? இப்போது உழைத்தால் பின்னால் புகழோடும், பொருளோடும் வாழலாம் என்ற வெறியை ஊட்டி வளர்ப்பது சமூக மேம்பாட்டிற்கு உதவுமா? இத்தகைய கேள்விகளை இன்று நாம் எழுப்ப வேண்டும்.

குடும்பத்தின் சேமிப்பை முழுக்கச் செலவு செய்து, மாணவர்களை இயந்திரங்களைப் போல் காலை முதல் இரவு வரை இயங்க வைத்துத் தேர்வை எதிர்கொள்ளச் செய்வது எந்த வகையில் மனிதத்தன்மை கொண்ட செயலாகக் கருத இயலும்? இது குழந்தைகளின் மீது நடத்தப்படும் வன்முறை இல்லையா?

தமிழ்நாடு மாநிலத்தில் சற்று ஏறக்குறைய 6000 அரசுக் கல்லூரி இடங்கள் மற்றும் 6000 தனியார் கல்லூரி இடங்கள் என சுமார் 12,000 மருத்துவ இளநிலைப் பட்டப் படிப்பிற்கான இடங்கள் உள்ளன.

தமிழ்நாடு மாநிலத்திலிருந்து 2023ல் நீட் எழுதிய 1, 44, 516 பேரில் "நீட்" மூலம் மருத்துவ இளநிலைப் பட்டப் படிப்பிற்குச் சேர தகுதி பெற்றவர்கள் 78, 693. பயிற்சிக்காகப் பல ஆயிரம் செலவு செய்தும் தகுதி பெறாமல் போன 65, 883 பேரின் நிலை என்ன? தகுதி பெற்றவர்களில் 12,000 பேர் கல்லூரிகளில் சேர்ந்த பிறகு, தகுதி பெற்றும் சேர முடியாமல் நிற்கும் சுமார் 60, 000 பேரின் நிலை என்ன? அவர்கள் உழைப்பு, அவர்கள் பயிற்சிக் கூடங்களுக்குச் செலுத்திய தொகை இவற்றுக்கு யார் பதில் சொல்வார்கள்?

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதலாக விண்ணப்பம், கடந்த ஆண்டைவிட கூடுதலாகத் தகுதி பெற்றவர்கள் எண்ணிக்கை. அதற்குக் காரணம் என்ன?

2021 ஆம் ஆண்டு "நீட்" எழுதி மருத்துவக் கல்லூரியில் சேர முடியாதவர்கள், இரண்டாம் முறையாக 2022ல் "நீட்" எழுதி, கடந்த ஆண்டும் மருத்துவக் கல்லூரியில் சேர முடியாதவர்கள், மூன்றாவது முறையாக இந்த ஆண்டு, அதாவது 2023ல் "நீட்" எழுதி உள்ளனர்.

இரண்டு மாநிலங்களின் ஆளுநர்கள் "நீட்" வெற்றி பெற்றுள்ளதாகத் தங்களின் அறிக்கைகள் மூலம் கொண்டாடி உள்ளனர்.

" நீட்" எனும் வணிக நடவடிக்கை வெற்றி பெற்றுள்ளது. இன்றைய நாளிதழ்களில், காட்சி ஊடகங்களில் வெளிவந்துள்ள விளம்பரங்களே அதற்குச் சாட்சி.

கல்வியும், மருத்துவமும் வணிகச் சந்தையிடம் தோற்றுப்போய் உள்ளன. மாணவர் எதிர்காலம் பகடைக் காயாக வைக்கப்பட்டு, பெற்றோர் சேமிப்பு முதலீடாகச் செலுத்தப்பட்டதால் "நீட்" பயிற்சி வணிக நிறுவனங்கள் கொள்ளை இலாபம் ஈட்டி உள்ளன.

"நீட்" மூலம் தனியார் நிர்வாக ஒதுக்கீட்டிலும், தனியார் நிகர்நிலைப் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்த மாணவர்களின் மதிப்பெண் பட்டியல் வெளியிட முடியுமா?

"நீட்" நடைமுறையில் மொத்த மதிப்பெண் 720. பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் மேல் இருந்து கீழாக, தரவரிசையில்தான் அனைத்துத் தனியார் நிர்வாக இடங்களிலும் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று நிரூபிக்க இயலுமா?

720க்கு 500 பெற்றவர் இருந்தால் அவருக்கும் கீழாக மதிப்பெண் பெற்றவர் எந்தத் தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரியிலும் மற்றும் நிகர் நிலைப் பல்கலைக்கழகத்திலும் கடந்த ஆண்டுகளில் சேரவில்லை என்று ஆதாரத்துடன் நிரூபிக்க இயலுமா?

ஆளுநர்கள்தானே. அதிலும் ஒருவர் மருத்துவர், மற்றொருவர் இந்திய காவல் பணி அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர்களால் இந்தத் தகவல் திரட்ட முடியாதா?

இந்த ஆண்டு 50ஆவது பர்செண்டெயில் (50th Percentile)ல் இடம்பெற்றவர்கள் யார் யார்?

"நீட்" மதிப்பெண்களில் 720 முதல் 137 வரை மதிப்பெண் பெற்ற பொதுப் பிரிவினர் 50ஆவது பர்சென்டெயில் இடம்பெற்றுள்ளனர். அதாவது, இந்த பர்சென்டெயிலில் இருப்பவர்கள் மருத்துவ இளநிலைப் பட்டப் படிப்பில் சேரத் தகுதி பெற்றவர்கள்.

720க்கு 720 மதிப்பெண் பெற்றவரும், 720க்கு 137 மதிப்பெண் மட்டுமே பெற்றவரும் ஒரே தரவரிசையில் அதாவது 50ஆவது பர்சென்டெயில் இடம் பெற்றுள்ளனர்.

மருத்துவ மாணவர் சேர்க்கைக் கலந்தாய்வில் 720 மதிப்பெண் தொடங்கி மேலிருந்து கீழாக முறைப்படி கல்லூரிகள் ஒதுக்கப்படும். அரசுக் கல்லூரிகளில் சேர்க்கை முடியும் வரை இதில் எந்தச் சிக்கலும் ஏற்படாது.

அரசுக் கல்லூரிகளில் இடங்கள் நிரப்பப்பட்டு, தனியார் கல்லூரிகளுக்கான அரசு இடங்கள் நிரப்பப்படும். இந்த இடங்கள் நிரப்பப்பட்ட பின்னர் தனியார் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் நிரப்பப்படும்.

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுக் கட்டணம் 13,000/- ஐந்தாண்டு படிப்பை முடிக்க அதிகபட்சமாக சுமார் 65,000/- மட்டுமே.

தனியார் நிர்வாக இடங்கள் மற்றும் தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் ஆண்டுக் கட்டணம் சுமார் 15,00,000/- முதல் 25,00,000/- வரை. அதாவது ஐந்தாண்டு படிப்பை முடிக்க சுமார் எழுபத்தைந்து இலட்சம் முதல் ஒன்றேகால் கோடி ரூபாய் வரை தேவைப்படும்.

தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் 2019 தனியார் இடங்களில் 50% இடங்களுக்குக் கட்டணத்தைத் தனியார் நிர்வாகங்களே தீர்மானித்துக் கொள்ளலாம். கட்டணம் விதிப்பதில் வெளிப்படைத்தன்மை வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தனியாருக்குத் தேவையான அளவு, அவர்கள் விருப்பப்படி கட்டணம் தீர்மானித்துக் கொள்ளும் உரிமையை ஒன்றிய அரசு இயற்றிய சட்டம் தந்துள்ளது.

தமிழ்நாடு மாநிலத்தில் 65% இடங்கள் அரசு இடங்கள் என்று தனியார் நிர்வாகத்திடம் தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

50% இடங்களுக்கு நிர்வாகமே கட்டணம் தீர்மானிக்கும் உரிமையை ஒன்றிய அரசின் சட்டம் இந்த நிர்வாகங்களுக்கு வழங்கி உள்ளதால், தமிழ்நாடு அரசு இடங்களில் இந்தக் கல்லூரிகளில் சேரும் சுமார் 15% மாணவர்களும் நிர்வாகம் கோரும் பணத்தைச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் அவர்களின் இடம் காலி இடமாக நிர்வாகம் அறிவிக்கும்.

சுயநிதி தனியார் கல்லூரி நிர்வாக இட ஒதுக்கீடு மற்றும் சுயநிதி நிகர் நிலைப் பல்கலைக்கழக இட ஒதுக்கீடு ஆகியவற்றில் "நீட்" தகுதி அடிப்படையில் இடம் கிடைத்து, அந்தந்த நிறுவனங்களில் சேருவதற்குச் செல்லும் மாணவர்கள் நிறுவனங்கள் கோரும் "சட்டப்படியான", அதாவது அவர்கள் விருப்பப்படி கேட்கும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். அவ்வாறு மாணவர்களால் செலுத்த இயலவில்லை என்றால் அந்த இடம் காலி இடமாக அறிவிக்கப்படும்.

ஐந்தாண்டிற்கு சுமார் ஒரு கோடி ரூபாய் கட்டணமாகச் செலுத்தும் அளவிற்கு எத்தனை பெற்றோர்கள் தயாராக இருக்கின்றனர்?

பெற்றோர் சேமிப்பை வைத்து, மாணவர்கள் எதிர்காலம் பகடைக்காயாக வைக்கப்பட்டு நடத்தப்படும் இந்த "நீட்" நடைமுறையை வணிகச் சூதாட்டம் என்று சொல்லாமல் வேறு எந்தப் பெயர் கொண்டு அழைப்பது?

மருத்துவ மாணவர் சேர்க்கையில் தனியார் கல்லூரிகளில் / தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் முறைகேடு நடக்கிறது, மிக அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது அதைக் கட்டுப்படுத்துங்கள் என்று வல்லுநர் குழு, நாடாளுமன்ற நிலைக்குழு மற்றும் உச்சநீதிமன்றம் ஆகியவை ஒன்றிய அரசிற்கு பரிந்துரைத்தது.

அதற்கு நேரெதிராக, " நீட்"டை மாநில அரசுக் கல்லூரிகள் மீது திணித்து, தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் 2019 இயற்றி மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவத்தை மொத்தமாகத் தனியார் கட்டுப்பாட்டில் செல்ல ஒன்றிய அரசு வழி வகுத்துள்ளது.

எதிர்காலத்தில், தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் உயர் சிறப்புப் பட்டப்படிப்புகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் இல்லாமல் அரசுக் கல்லூரிகளில் உயர் சிறப்பு பட்டப்படிப்புகளின் (Super Speciality Courses) இடங்களை இழக்க வேண்டிய சூழல் ஏற்படும்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளுக்குப் போதிய மருத்துவர்கள் கிடைக்காமல் போகும் பேராபத்து உள்ளது.

எனவே, "தமிழ்நாடு மருத்துவ இளநிலைப் பட்டப் படிப்பு மாணவர்கள் சேர்க்கை சட்டம் 2021" குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற தமிழ்நாடு ஓரணியில் திரள வேண்டும்.

அது ஒன்றே மருத்துவக் கல்வியையும், மருத்துவ சேவையும் முற்றிலும் தனியாரிடம் செல்வதைத் தடுக்கும்.

+2 மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ இளநிலைப் பட்டப் படிப்பு மாணவர் சேர்க்கை என்ற நடைமுறை மட்டுமே மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகாமல் பள்ளிப் படிப்பை முடிக்க உதவும்.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட உரிமைகளைக் காக்கவும், நமது ஜனநாயகம், சுதந்திரம் காக்கப்படவும் விழித்தெழுவோம்.

**வேண்டாம் இந்திய ஒன்றியக் கல்விக் கொள்கை**
**வேண்டும் தமிழ்நாட்டிற்குத் தனித்த கல்விக் கொள்கை**




**கடந்த மே 27 அன்று சென்னையில் பாவலரேறு தமிழ்க்களத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் சிவக்குமார், பிரின்சு கஜேந்திரபாபு, முனைவர் குணத்தொகை, பொழிலன், வாலாசா வல்லவன், ஒப்புரவாளன், திருமலை தமிழரசன் ஆகியோர் உரையாற்றினர்.. நிகழ்ச்சியில் பங்கேற்ற திரு. அரங்க. நாராயணன் அவர்கள் ஐந்தாயிரம் நன்கொடையாக அளித்தார்.. அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்..**

# தமிழீழ உரிமை அரசியலுக்கு இந்தியா நட்பன்று; பகையானதே!..

**பொழிலன்**

கடந்த காலங்களில் தங்களைச் சைவர்கள் எனக் கதைத்துக் கொண்டிருந்த யாழ்ப்பாணச் சிவனியர்கள் இன்றைக்கு இந்துக்கள் என்று கூறிக்கொண்டு ஆர் எஸ் எஸ் இன் அணிகளைக் கம்பளம் விரித்து வரவேற்கின்றனர்..

திம்பு பேச்சுவார்த்தைத் தொடங்கி.. முள்ளிவாய்க்கால் பேரழிவு வரை இந்தியாவை நம்பி பேரழிவுக்கு ஆளாக்கப்பட்டபோதும்... அறுப்பவனை நம்பியே ஏமாந்து போகும் ஆடுகளைப் போல்.. இந்தியாவை நம்பியே ஈழத் தமிழர்கள் ஏமாந்து வருகின்றனர்..

ஆர் எஸ் எஸ் சும் அதன் பரிவார அமைப்புகளும் தங்களை மீட்கும் என்று மதி மயங்குகின்றனர்..

அமெரிக்காவிலும் இலண்டனிலும் மட்டுமல்ல இலங்கையிலும் அண்ணாமலையையும் மோடியையும் ஈழத் தமிழர்கள் பலர் வரவேற்கின்றனர்..

> இதுவரை எந்த இந்தியத் தலைமை அமைச்சரும் போகாத யாழ்ப்பாணத்திற்கு மோடி சென்று வந்துவிட்டதாகவும்..
>
> முள்ளிவாய்க்கால் அழிவில் வீடுகளை இழந்த 27 ஆயிரம் பேருக்கு வீடுகள் கட்டித் தந்ததாகவும்..
>
> சிங்கள இந்திய நல்லுறவு காரணமாக இலங்கை, தமிழ்நாட்டு மீனவர்களுக்கு நெருக்கடிகள் இல்லை என்றும்..
>
> இலங்கையில் உள்ள தமிழர்கள் அமைதி சமத்துவம் கண்ணியத்துடன் வாழ்வதை உறுதி செய்ய மோடி தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்றும்..
>
> அண்மையில் சென்னைக்கு வந்த இராஜ்நாத் சிங் பேசுகிறார்..

இவை ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசால் குறிப்பாகப் பாஜக அரசால் விடிவு ஏற்படும் என்று நம்பிக் கொண்டிருக்கிற ஈழத் தமிழர்களை மட்டுமின்றி, முள்ளிவாய்க்கால் நெருக்கடியில் ஈழத் தமிழர்களைக் காங்கிரசு கட்சிதான் அழித்தது என்ற கருத்தில் காங்கிரசு மீது கடும் வெறுப்போடு இருக்கிற தமிழ்நாட்டுத் தமிழர்களையும் ஏமாற்றுகிற பேச்சு என்பதைக் கடந்த 50 ஆண்டுக்காலத் தமிழீழ விடுதலை அரசியலின்.. அதற்கு ஆதரவான தமிழ்நாட்டு அரசியலின் நிலைகளை அறிந்தவர்கள் அறிய முடியும்..

இந்திய அரசு என்பது கட்சி சார்ந்தது அல்லது குறிப்பிட்ட தலைவர்கள் சார்ந்தது மட்டுமாக அவர்கள் புரிந்து கொள்கிறார்கள்.. அதாவது காங்கிரஸ் கட்சியோ, அல்லது பாஜகவோதான் காரணம் என்பதாகக் கருதுகின்றனர்..

இது அவர்களின் பிழை மட்டுமல்ல.. கடந்த காலங்களில் தமிழ்நாட்டின் தலைவர்கள் பலரும்கூட அவ்வாறே கருத்துகள் பேசி வந்தனர்.. இன்னும் பேசி வருகின்றனர்..

இந்திராகாந்தி இருந்திருந்தால் தமிழீழம் விடுதலை பெற்றிருக்கும்.. என்றும், வாஜ்பாய் வென்றிருந்தால் ஈழத் தமிழர்களுக்குப் பெருமளவில் துணை செய்த ஜார்ஜ் பெனாண்டஸ் மூலமாகவும் ஜஸ்வந்த் சிங் மூலமாகவும் தமிழீழத்தையே விடுதலைப்பெற வைத்திருக்க முடியும் என்றெல்லாமும் கருத்து கொண்டிருந்தவர்களும் இப்போதும் பேசிக் கொண்டிருப்பவர்களும் தமிழ்நாட்டில் உண்டு..

இந்திய அரசியல் அதிகாரம் என்பது ஏதோ ஒரு கட்சியால் அல்லது ஒரு சில தலைவர்களால் தீர்மானிக்கப்படுவதோ முடிவு எடுக்கப்படுவதோ.. இல்லை..

எனவே குறிப்பிட்ட ஒரு தலைவராலோ அல்லது ஒரு சில தலைவர்களாலோ இன்றைய இந்திய அரச அமைப்பை அப்படியே வைத்துக் கொண்டு மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியாது..

அதாவது, இந்தியாவைச் சுரண்டி சூறையாடிக் கொண்டிருக்கிற அம்பானி, அதானி உள்ளிட்ட பன்னாட்டுக் கார்ப்பரேட் பெரு முதலாளிகளை வீழ்த்தி விட முடியாது.. இந்தியப் பார்ப்பனிய அதிகாரப் போக்குகளே இல்லாமல் செய்துவிட முடியாது..

இந்தியா என்பது ஒரு கட்சியாலோ ஒருசில தலைவர்களாலோ உருவாக்கப்பட்டதோ அல்லது அவர்களின் ஆணைக்குக்கீழ் நடந்து கொண்டிருப்பதோ அல்ல.. அது ஒரு அதிகாரக் கட்டமைப்பு..

இந்திய அதிகாரக் கட்டமைப்பு என்பது பன்னாட்டுக் கார்ப்பரேட் முதலாளிய நலன்கள் சார்ந்ததாகவும், பார்ப்பனிய சாதிய நலன்கள் சார்ந்ததாகவும் இருக்கிற நிலையில்.. அந்த அதிகாரக் கட்டமைப்பை முழுமையாக வீழ்த்தி மக்களுக்கான மக்களரசு அமைப்பாகப் புதிய ஒன்றியக் குடியரசை நிறுவாமல் இன்றைய சூழலில் இந்தியாவுக்குள் இருக்கிற மொழித் தேசங்களிலோ அல்லது தமிழ் ஈழத்திலோ முழு உரிமைகள் கொண்ட ஓர் அரசியல் மாற்றத்தைச் செய்துவிட முடியாது..

ஏதோ காங்கிரசு மட்டுமே தமிழ் ஈழத்திற்கோ அல்லது இந்தியாவில் இருக்கிற தேசிய இனங்களின் உரிமைகளுக்கோ பகை கட்சி போல கருதுவதும் பேசுவதும் வேடிக்கையானதும் தவறானதும் ஆகும். காங்கிரசு மட்டுமன்று, காங்கிரசை விட பாஜக இன்னும் கூடுதலாகத் தேசிய இன அடையாளங்களையும் உரிமைகளையும் அழிக்கிற வெறித்தனம் கொண்ட நடைமுறையுடையது என்பதை இந்தியாவில் இருக்கிற தேசிய இன மக்கள் அடைந்து வரும் கொடுமைகளிலிருந்து உணரலாம்..

இந்நிலையில் இந்தியாவில் உள்ள மொழித் தேச மக்களை மட்டுமல்லாது ஈழத் தமிழர்களையும் ஏமாற்றுவதற்காகவும் ஈர்ப்பதற்காகவும் அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்காகவும் சில சலுகைகளைப் பாஜக அரசு செய்வது போல் காட்டிப் பசப்பிவருவதை உண்மை எனக் கருதித்தான் இன்றைக்கு ஈழத் தமிழர்கள் பலர் பாஜகவை நம்புகின்றனர்.. அண்ணாமலைக்குச் செங்கம்பளம் விரித்து வரவேற்கின்றனர்.. அது எவ்வளவு பெரிய ஏமாளித்தனம் என்றும் தமிழீழத்தை மட்டுமல்லாது தமிழ்நாட்டையும் பாழடிக்கிற செயல் என்பதையும் அவர்கள் உணரவேண்டும்..

முதலில் தமிழீழத் தமிழர்களின் மீதான அடக்குமுறைகள்.. தமிழீழ விடுதலை அரசியல்.., தமிழீழத் தேசம் என்பதற்கும்..

தமிழ்நாட்டுத் தமிழர்களின் மீதான அடக்குமுறைகள்.. தமிழ்நாட்டு விடுதலை அரசியல்.. தமிழ்(நாட்டு)த் தேசம் என்பதற்கும்.. பெருத்த இடைவெளி உண்டு என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்..

இரண்டு தேசிய மக்களுக்கும் தமிழ் மொழி தாய்மொழியாக இருக்கலாம்.. தங்களின் இனம் தமிழ் இனம் என்றுகூடச் சொல்லிக் கொள்ளலாம்.. ஆனால் இரண்டுக்குமான அரசியல், பொருளியல், வரலாற்றியல் நிலைகள் வெவ்வேறானவை..

இரண்டு தேசங்களும் அடிமைப்பட்டிருக்கும் சூழலில் இரண்டுமே விடுதலைக்கான போராட்டக் களத்தில் இருக்கின்றன.. இரண்டு தேசங்களின் அரசாட்சியினரும் நட்பு பாராட்டிக் கொள்ளும் அதிகாரத்தன்மையுடையவர்கள்.. அதேபோல் இரண்டு தேசிய இன மக்களும் உறவு பேணிக் கொள்ளும் அடிமைத்தன்மைக்குரியவர்கள்..

இரண்டு தேசிய இனத்தினரும் தங்களின் மற்ற தேசிய இனத்திற்கு ஆதரவளிக்க முடியும்.. முழுமையாகத் துணை நிற்க முடியும்.. ஆனால் இரண்டின் விடுதலைக்காகவும் இரண்டு தேசிய மக்களுமே இணைந்து போராட முடியாது..

ஒரு தேசிய இனம் முதலில் விடுதலை பெறட்டும். மற்றது அடுத்து விடுதலை பெறலாம் என்கிற வகையில் இரண்டும் ஒன்றுக்காக இன்னொன்று காத்திருக்கவும்.. நிறுத்திவைக்கப்படவும் இயலாது...

ஒன்றின் அரசியலில் மற்றதன் அரசியலுக்குச் சில வகையில் தொடர்பு இருக்கலாமே ஒழிய.. இரண்டும் ஒரே அரசியல் நிலைப்பாடு கொண்டிருக்க இயலாது..

ஆனால் இரண்டு அதிகார வகுப்புகளுமே இரண்டு தேசிய இனங்களுக்கும் எதிர்மைக்குரியதாகவே இருக்க முடியும்..

தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு அல்லது உரிமைகளுக்கு எப்படி தமிழ்நாட்டு மக்கள் சிங்கள அரசின் ஆதரவையோ நட்பையோ பெற இயலாதோ.. அதேபோல் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு அல்லது உரிமைகளுக்குத் தமிழ் ஈழ மக்கள் அல்லது இயக்கங்கள் இந்திய அரசின் ஆதரவையோ நட்பையோ பெற இயலாது.. கூடாது..

தமிழ் ஈழ அரசியலில்.. கடந்த காலங்களில்.. நடந்துவிட்ட பல்வேறு தவறுகளில்.. இதையும் ஒன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும்..

தமிழ்ஈழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பல தமிழ்நாட்டு மக்களை நேசித்ததைவிட இந்திய அதிகார வகுப்பை, இந்திய ஆட்சியர்களை நம்பவும் நேசிக்கவும் செய்தனர்..

அதனால் ஏற்பட்ட எண்ணற்ற இழப்புகளை இன்னமும் அவர்கள் சரிவர விளங்கிக் கொள்ளவில்லை..

அந்த நிலையிலான கருத்துகளே இப்போதும் அவர்களுள் பலருள் தொடர்வதுதான் பெரிய அவலத்திற்குரியது..

தமிழ் ஈழ மக்கள் அல்லது இயக்கக் கருத்துடையவர்கள் பலர் தங்களின் நிலைப்பாடுகளில் இந்திய பாஜக அரசு தங்களுக்குச் சார்பாக இருப்பதாகக் கருதிக் கொண்டு தமிழ்நாட்டு அரசியலைத் தங்களுக்காக வளைத்து மாற்றுவதுடன் காங்கிரசு எதிர்ப்பு நிலையை மட்டுமே பேசுவதும் பாஜக வை நேரடியாகவோ திரைமறைவிலோ ஆதரிப்பதாகவுமே செயல்படுகின்றனர்..

கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் இருந்த பல்வேறு தேர்தல் கட்சிகள்.. அவற்றுக்கு இடைப்பட்ட முரண்பாடுகள்.. அவை இந்திய ஆட்சியதிகாரத்துடன் போட்டிப் போட்டுக் கொண்டு அடிமைப்பட்டிருந்த நிலையில்.. ஈழத்தமிழர் போராட்ட இயக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அரசியல் கட்சியோடு சேர்ந்து கொண்டு இங்கிருந்த முரண்பாடுகள் போலவே தங்களுக்குள் முரண்களை ஏற்படுத்திக் கொண்டதும், அந்த முரண்களை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு அவர்களுக்குள் இந்திய அரசு ஊடுருவி இயக்கங்களை மோத விட்டு அழித்ததும் மிகப்பெரும் படிப்பினையாக இருக்க வேண்டும். அதே நடைமுறையையே இன்னும் கூடுதலாகத் தமிழீழத் தமிழர்களிடையேயும் தமிழ்நாட்டுத் தமிழர்களிடையேயும் பாஜக அரசு இப்போது செய்துவருவதை அவர்கள் மட்டுமன்றித் தமிழ்நாட்டுத் தமிழர்களும் விளங்கிக் கொள்ளவேண்டும்..

# ஆரியப் பார்ப்பனியத் திமிரில் ஆடித் திரியும் அடங்காப் பிடாரி ஆளுநர் இரவியை அரட்டி வைப்போம்!

பாவெல்

**எந்தக் கட்சியில் இருந்தாலும்.. என்ன நோக்கமிருந்தாலும்... ஆளுநரே வேண்டாம் என்பது தமிழ்நாட்டுத் தமிழர்கள் அனைவருக்கும் இன்றைய முதன்மை முழக்கமாக இருக்கவேண்டும்.. தமிழ்நாட்டிற்குள்ளான நம் குடுமிப் பிடி சண்டைகளைப் பிறகு வைத்துக் கொள்ளலாம்... அனைவருக்குமான பொது எதிரியான பாசிச இந்தியப் பார்ப்பனிய வெறியர்களுக்கு எதிராக நிற்போம்.. ஆளுநர் என்கிற இந்திய ஒட்டுண்ணி அடிவருடியை விரட்டியடிக்க ஒன்றுசேர்வோம்... திருவள்ளுவர் தொடங்கி வள்ளலார் வரை இழிவுபடுத்தும் ஆரியப் பார்ப்பனிய வாய்க்கொழுப்பை விரட்டியடித்து விடைகூறுவோம்..**

**மாநிலங்களுக்கு ஆளுநர்களே தேவையில்லை.**

ஆளுநரின் சட்டப்படியான வேலையை அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 200 தெளிவாக விளக்குகிறது; சட்டமன்றங்களால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு 1. ஒப்புதல் அளிப்பது. 2. ஒப்புதலை நிறுத்தி வைப்பது. 3. மறுபரிசீலனைக்காக மசோதாவை சட்டசபைக்கு திருப்பி அனுப்புவது. 4. குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவது.

அப்படியானால் மேல் சொல்லப்பட்ட நான்கில் ஏதாவது ஒன்றை ஆளுநர்கள் காலம் தாழ்த்தாமல் உடனே செய்ய வேண்டும் என்பதேயாகும். ஆனால் ஆளுநர்கள் அவ்வாறு செயல்படுத்தாமல், மாறாக, சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில், முடிவெடுப்பதில் காலதாமதம் செய்வது, மக்களால் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் அளிக்கும் அறிவுரைகளின்படி செயல்படாமல் இருப்பது, மாநில அரசையும், அரசின் கொள்கைகளையும் விமர்சிப்பது, இன விரோத ஒன்றிய அரசின் திட்டங்கள் மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதாக இருந்தாலும் வெளிப்படையாக அதை ஆதரிப்பது, இந்திய ஒன்றிய அரசின் கொள்கைகளை முழுநேரமாகப் பரப்புகின்ற கொள்கைப்பரப்பு செயலர்களாகவே செயல்படுவது போன்றவை தற்போது மாநிலங்களில் ஆளுநர்களின் சட்டவிரோதமான அடாவடித்தனமாக நடைமுறையாகிவிட்டது.

1956- இல் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டது. அந்த மொழிவாரி மாநிலப் பிரிவினை என்பது அந்தந்த மொழி பேசக்கூடிய தேசிய இனங்களுக்கான முழு இறையாண்மை பெற்ற தேசங்களாக, தேசிய இனங்களாக பிரிக்கப்படவில்லை. மாறாக இந்தியாவின் நிர்வாக வசதிக்காக மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டது. அவ்வாறு பிரிக்கப்பட்ட மாநிலங்களை கண்காணிக்கவும், ஒன்றிய அரசுக்கு கட்டுப்படுத்தி வைக்கவும் இந்திய ஆட்சியாளர்கள் ஆளுநர் எனும் கங்காணியை இன்றளவும் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்தியச் சிறைக்கூடத்திற்குள் சிக்கித் தவிக்கும் தேசிய இன மக்கள் இந்திய ஒன்றிய அரசின் கங்காணிகளை (ஆளுநர்களை)கடுமையாக எதிர்த்து வரும் சூழ்நிலையில் அந்தந்த மாநில அரசுகள்ஆளுநர் எதிர்ப்பை சம்பிரதாய எதிர்ப்புகளோடு நிறுத்திக் கொண்டு ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள ஆளுநர்களோடு கைகோர்த்துக் கொள்ளும் அவலம் தொடர்ந்துகொண்டுதான் வருகிறது.

தமிழ்நாடு கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த கங்காணி (ஆளுநர்) முறையை கடுமையாக எதிர்த்து தான் வந்திருக்கிறது."ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்குக் கவர்னரும் தேவையில்லை" என அறிஞர் அண்ணா தொடக்கத்திலேயே விமர்சனம் செய்துள்ளார்.

**ஒன்றிய அரசின் ஒற்றர்களே ஆளுநர்கள்:**

அரசியல் நிர்ணய சபையில் ஆளுநர் பதவி குறித்துக் கடுமையான தருக்கங்கள் (விவாதங்கள்)நடந்தன. அந்த விவாதங்களைப் படித்தால் ஒன்றிய அரசின் மாநிலங்களைக் கண்காணிக்க கூடிய ஒற்றர்களாக செயல்படுவதற்கே ஆளுநர் பதவி உருவாக்கப்பட்டது என்பது தெளிவாக புரிந்து கொள்ள முடியும். அரசியல் சட்ட உருவாக்கத்திற்கான வரைவுக் குழு 'ஆளுநர்கள் மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், என்று தனது வரைவில் குறிப்பிட்டு இருந்தது. இதுகுறித்த விவாதத்தில் இந்த நடைமுறை இரண்டு முதலமைச்சர்களை உருவாக்கிவிடும் என்று கூறி இந்த முடிவு புறந்தள்ளப்பட்டது. கவர்னர் பதவிக்கான வேட்பாளர் பட்டியல் ஒன்றை தயாரித்து சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று பட்டியலில் இருந்து ஒருவரை தேர்வு செய்ய குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம் என்பது இரண்டாவது ஆலோசனையாக முன்வைக்கப்பட்டது.

இந்த முறையினால் மாநிலத்தில் ஆளும் கட்சியின் ஆதரவு பெற்றவர் தான் ஆளுநராக வர முடியும், பிறகு மாநில அரசும் ஆளுநரும் கைகோர்த்து செயல்படுவார்கள் என்பதால் இந்த ஆலோசனையும் புறந்தள்ளப்பட்டது. பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் பிரிந்து செல்வதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்கான வலிமையான சட்டப்பிரிவுகளை உருவாக்கி விட வேண்டும் என்பதே காங்கிரஸ் தலைவர்களின் உளவியலாக இருந்தது. அந்த உணர்வுகளே அரசியல் சட்ட உருவாக்கத்திற்கு அடிப்படையாக இருந்தது. மாநில அரசுகளுக்கு நெருக்கமான ஒருவர் ஆளுநராக வரக்கூடாது என்பதில் காங்கிரஸ் தலைவர்கள் உறுதியாக இருந்தார்கள். ஆளுநர் அந்த மாநிலத்துக்கு தொடர்பு இல்லாதவர்களாக வேறு மாநிலங்களில் இருந்து நியமிக்கப்பட வேண்டும் என்று நேரு வலியுறுத்தினார்.

1949 மே 31 அன்று அரசியல் நிர்ணய சபையில் நேரு பேசியது;"ஆளுநர்கள் மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருந்தால் மாகாணப் பிரிவினை உணர்ச்சிகளையும், குறுகிய மாகாண உணர்வுகளையும் ஊக்கப்படுத்திவிடும் என்றார். காங்கிரஸ் உறுப்பினர்களில் ஒருவரான பி எஸ் தேஷ்முக் பின்வரும் கேள்வி எழுப்பினார், "முதல்வரும் ஆளுநரும் எல்லா பிரச்சனைகளிலும் ஒன்றுபட்டு நின்று, ஒன்றிய அரசை எதிர்ப்பதிலும் அவர்கள் ஒன்றுபட்டு நின்றால் பிறகு என்ன செய்ய முடியும்? மத்திய அரசின் ஆணைகளையும், கட்டளைகளையும் மாநில அரசு செயல்படுத்த மறுத்தால் என்ன செய்வது?. மத்திய அரசு, மாநில அரசு மீது படையெடுத்து செல்லுமா? என்ற கேள்விகளுக்கு இறுதியாக ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவதாக இருப்பார்" என்ற முடிவெடுக்கப்பட்டது. இதற்கான திருத்தத்தை இறுதியாக கொண்டு வந்தவர் பிரஜேஸ்வர் பிரசாத். மத்திய அரசின் அதிகாரம் அனைத்து மாகாணங்களிலும் நிலைநாட்டப்பட்டாக வேண்டும். இது அவசியமானது. என்பது தீர்மானத்திற்கு அவர் கூறிய காரணம்.

இதே அரசியலமைப்பு நிர்ணய சபையில் ஆளுநர் பதவி குறித்த விவாதத்தில், டாக்டர் அம்பேத்கர் நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்றும், அமைச்சர்கள் குழு வழங்கிய ஆலோசனையின்படி மட்டுமே தான் ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்றும் தெளிவாக கூறியிருக்கிறார்.

**இந்தியா ஓர் தேசமா....?**

தற்போது இந்திய ஒன்றிய ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் இந்துத்துவ பாசிச மோடி அரசு, அரசியலமைப்புச் சாசனத்தில், எந்தவிதமான சட்ட வடிவங்களையும் பின்பற்றாமல் திருத்தங்கள் செய்ய வேண்டும் எனும் முடிவில் தெளிவாக இருக்கிறார்கள். அதில் சனநாயகம் (Democracy), மதச்சார்பின்மை (Secularism), இந்திய ஒன்றியம் (union of india) என்கிற வார்த்தைகள் இந்துத்துவ பயங்கரவாத மோடி, அமித்ஷா கும்பல்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத கசப்பு வார்த்தைகளாக உள்ளது. பாரதம் என்றும் பாரத தேசம் என்றும் அனைவரும் அழைக்க வேண்டும்; இந்திய ஒன்றிய அரசு என்று அழைக்கக்கூடாது என்று மக்களுக்கு நெருக்கடி கொடுக்கும் நிலைக்கு இன்று வந்துள்ளார்கள். இந்தியாவை ஒருதேசம் என்று சொல்லுகின்ற இந்திய ஆட்சியாளர்களுக்கு, பலதேசங்களின் ஒருங்கிணைப்பே இந்திய ஒன்றியம். மாறாக இந்தியா ஒரு தேசம் அல்ல என்பதை அழுத்தமாக வலியுறுத்த வேண்டிய இடத்தில் நாம் இருக்கிறோம்.

பெரும்பாலும் ஆளுநர்களாக ஒன்றிய அரசால் நியமிக்கப்படுபவர்கள் 52% பேர் அந்த கட்சியின் அரசியல்வாதிகளாகவும், 26% பேர் அந்த கட்சிக்கு ஆதரவான ஓய்வு பெற்ற அதிகாரிகளாகவும் இருக்கின்றனர். அது மட்டும் அல்லாமல் ராணுவ அதிகாரிகளாக இருந்தவர்கள், நீதிபதிகளாக செயல்பட்டவர்கள், வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள் என அனைத்துத் துறைகளிலும் உள்ள ஆதரவாளர்களை ஆளுநராக ஒன்றிய ஆளும் அரசு நியமித்து அவர்கள் மூலம் மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் அவர்களுக்கு கடிவாளம் இடுகின்றனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு மோடி ஆட்சிக்கு வந்ததும், அருணாச்சலப் பிரதேசத்தில் ஆளுநர் ஜேபி ராஜ் கோல்வா மூலம் அங்கிருந்து காங்கிரஸ் ஆட்சியில் பெரும்பான்மை இல்லை என்று சொல்லி ஆட்சியை கலைத்தனர்.

அதில் உடனடியாக உச்ச நீதிமன்றம் தலையிட்டு, ஆளுநர் முடிவை நீக்கிவிட்டு "ஒரு ஆளுநர் தனது சொந்த விருப்பத்திற்காக சட்டமன்றத்தை கூட்டுவது ஆளுநரின் வேலை அல்ல சட்டமன்ற செயல்பாடுகளில் குறுக்கிடுவதாகும்" என்று கூறியது.

அதேபோல் கடந்த 2017 ஆம் ஆண்டு மணிப்பூர், கோவா உள்ளிட்ட மாநிலங்களிலும் பாஜகவின் கைக்கூலிகளாக ஆளுநர்கள் செயல்பட்டு பெரும்பான்மையாக காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்தும் பாஜக தலைமையிலான ஆட்சியை நிறுவ ஆளுநர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தினார்கள்.

கடந்த 2017 ஆம் ஆண்டு பீஹாரிலும் இதுதான் நடந்தது. ஆளுநர் கேசரிநாத் திரிபாதி ஒரு முழு நேர அரசியல்வாதி போலவே அங்கு செயல்பட்டு ஆட்சி கலைப்புக்குக் காரணமானார்.

உத்தரகாண்ட் மாநிலத்திலும் அம்மாநில ஆளுநர் கே கே பவுல் அங்கு நடந்த ஹரிஷ் ராவத் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியை கலைத்தார்.

அதேபோல் பஞ்சாப் மாநில முதலமைச்சருக்கும், ஆளுநர் பன்வாரிலால் புரோகித்துக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனையில் "அமைச்சர்கள் குழு ஒரு முடிவு எடுத்தால் அதனை மாநில ஆளுநர் ஏற்க வேண்டும். ஆளுநர் மாநில அமைச்சரவையின் முடிவுகளுக்கு உட்பட்டவர்" என உச்சநீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

இந்திய ஒன்றிய அரசு தனது கொள்கைக்கு இணங்காத எதிர்க்கட்சிகள் மாநிலங்களில் ஆட்சி நடத்தும் போது, அம்மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களுக்கு ஆளுநர்கள் மூலமாக அந்தந்த மாநிலங்களில் பிரச்சனைகளை உருவாக்க முடியும். தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, தெலுங்கானா, டெல்லி, மேற்குவங்கம், மகாராஷ்டிரா, மேகாலயா, பஞ்சாப், உத்தரகாண்ட் போன்ற இன்னும் பெரும்பான்மையான மாநிலங்களில் ஆளுநர்களை தரகர்களாக, ஒற்றர்களாக , கைப்பாவைகளாக இந்திய ஒன்றிய அரசு வைத்துக் கொண்டு பெரும் தொல்லைகளை கொடுத்துவருகின்றனர்.

ஆர் என் ரவி தமிழகத்தில் ஆளுநராக பொறுப்பேற்றதிலிருந்து, பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா என்கிற அமைப்பை தீவிரவாத அமைப்பு என்று சொல்லி தடைசெய்ததும், தமிழ்நாடு என்ற வார்த்தையை விட தமிழகம் என்ற வார்த்தையே பொருத்தமாக இருப்பதாக குறிப்பிட்டதும், தமிழக சட்டசபையில் ஆற்றிய உரையில் பெரிய அளவில் சர்ச்சையை ஏற்படுத்தியதும், சென்னை ராஜ்பவனில் இந்துத்துவ கோட்பாட்டாளர் தீன்தயால் உபாத்யாயா சிந்தனை சிதறல்கள், தீன்தயால் உபாத்யாயா ஒருங்கிணைந்த மனிதநேயம் ஆகிய தலைப்பிலான நூல்கள் வெளியிட்டு விழாவில் பேசிய R.N.ரவி "சனாதன தர்மம் என்பது விரிவானது. கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றில் `யாதும் ஊரே யாவரும் கேளிர்' என சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தர்மம் என்பதை நாம் மதம் என புரிந்துவிட்டோம். அவ்வாறு புரிந்து கொண்டதால் மாபெரும் தவறு செய்துவிட்டோம் என்று சொன்னது, நமது இந்தியக் கொள்கைகள் மேற்கத்திய சிந்தனையை தொடர்ந்ததாக இருந்தது. டார்வின் கோட்பாடும் மார்க்சின் சித்தாந்தம், இறையியல், ரூசோ கோட்பாடு என்பது எல்லாம் இந்தியாவின் தேசிய வளர்ச்சிக்கு

பாதிப்பை ஏற்படுத்தின. இந்தியாவை காரல் மார்க்ஸ் சிந்தனை சிதைத்துப் போட்டது. ஆனால் அந்த சிந்தனை இப்போது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. மார்க்ஸின் சித்தாந்தமானது இல்லாதவர்கள் மேலே உயர வேண்டும் என்கிறது. இது இருப்பவர்களுக்கும், இல்லாதவர்களுக்குமான மோதலை உருவாக்குகிறது. இது சமூகத்தில் பிளவுகளுக்கு காரணமாகவும், நிரந்தரமான மோதலையும் உருவாக்கக்கூடியது." என்றும், அது மட்டுமல்லாமல் இந்தியா என்கிற கட்டமைப்பு ரிஷிகளாலும்,முனிவர்களாலும் உருவாக்கப்பட்டது. இந்தியாவின் இதயமே ராமர் தான் என்கிற மதச்சார்பின்மைக்கு எதிரான கருத்துக்களை, ஆர்எஸ்எஸ் இன் கருத்துக்களை வெளிப்படையாக பேசி வருகிறார்ஆர்.என்.ரவி."அகப்பை பிடிப்பவன் தன்னவனானால், அடிப்பந்தியில் இருந்தாலென்ன? கடைப் பந்தியில் இருந்தால் என்ன?"எனும் பழமொழிக்கு ஏற்ப ஒன்றிய பாஜக அரசின் ஆட்சி இல்லாத மாநிலங்களில் கங்காணிகள் ஆளுநர்களை வைத்துக்கொண்டு மாநில உரிமைகளை நசுக்கும் வேலையை ஒன்றிய அரசு செய்து வருகிறது.

உதகமண்டலத்தில் உள்ள ராஜ்பவனில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாடு ஆளுநர் தலைமையில் கடந்தவாரம் கூட்டப்பட்டது. பல்கலைக்கழகங்களுக்கு முதலமைச்சரையே வேந்தராக மாற்றும் தமிழக அரசின் சட்ட மசோதா ஆளுநரின் கையெழுத்தாகாமல் இன்னும் நிலுவையில் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஒன்றிய அரசின் புதிய தேசிய கல்விக் கொள்கையை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்நாடு அரசு மாநில கல்விக் கொள்கையை உருவாக்க குழு அமைத்துள்ள நிலையில் ஒன்றிய அரசின் புதிய தேசிய கல்விக் கொள்கையை ஆதரித்து அதன் முக்கியத்துவம் குறித்துத் துணைவேந்தர்கள் மாநாட்டில் பேசியதோடு இல்லாமல் தொடர்ந்து மாநில அரசின் கொள்கைக்கு எதிராக கங்காணி ஆர்.என்.ரவி பேசி வருவது, "அங்காடிக்காரியை சங்கீதம் பாடச் சொன்னால் வெங்காயம், கருவேப்பிலை என்பாளாம்" என்பதைப் போல உள்ளது.

வடலூரில் வள்ளலாரின் 200 வது ஜெயந்தி விழாவில் கலந்து கொண்ட ஆர்.என்.ரவி "வள்ளலார் சனாதன தர்மத்தின் ஒளிரும் உச்ச நட்சத்திரம்" என்று ஆரிய விசத்தை கக்கிஉள்ளார்.வள்ளலார்க்கும் சனாதனக் கோட்பாட்டுக்கும் எந்தவித ஒட்டும் இல்லை, உறவும் இல்லை. ஆனால் இந்துத்துவாவின் சனாதன கோட்பாட்டை எப்படியாவது தமிழ்நாட்டில் வேரூன்றி விட வேண்டும் என்றும், வள்ளலாரின் சன்மார்க்க நெறியை சனாதன கோட்பாட்டிற்குள் புகுத்தி விட வேண்டும் என்றும் துடித்துக் கொண்டிருக்கிறது மதவெறி மோடி அரசு. அதை தமிழ்நாட்டிற்குள்ஆட்சி அதிகாரத்தின் வழி செய்ய முடியாததால் இந்தியத்தின் கங்காணி ஆளுநர் மூலமாக செய்து கொண்டிருக்கிறார்கள்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என பாடிய வள்ளலாருக்கும் சனாதனத்துக்கும் என்ன தொடர்பு? சனாதனக் கோட்பாடும், வள்ளுவக் கோட்பாடும் நேர்எதிரானது. சனாதனக் கோட்பாடும் வள்ளலார் வழியும் நேர் எதிரானது. இவ்வாறு சனாதன கோட்பாட்டிற்கு நேர் எதிரான கோட்பாடுகளை இந்துத்துவ பாசிச கோட்பாட்டுக்குள் கொண்டு வந்து நிறுவுகிற வேலையை செய்து கொண்டிருக்கிறார் ஆர்.எஸ்.எஸ்சின் தமிழ்நாட்டு தபால்காரர்ஆர்.என்.ரவி.

ஆர்.என். ரவி போன்ற ஆர்எஸ்எஸ் கருத்தாளர்கள் தான் இந்திய ஒன்றியத்தில் இருக்கிற பல்வேறு தேசிய இனங்களில் இந்திய ஒன்றிய அரசின் கங்காணிகளாக (ஆளுநர்களாக) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆளுநர்களின் வேலையே திட்டமிட்ட மாநில உரிமைகளைப் பறிப்பதும், இந்திய ஒன்றிய அரசுக்கு சேவகம் செய்வதும் என்பதுதான்.

எனவே, நமது முதன்மை இலக்கு இந்திய சிறைக்கூடத்தில் சிறைப்பட்டுக் கிடக்கும் தமிழ்நாடு உள்ளிட்ட தேசிய இனங்கள் தங்களுக்கான இறையாண்மைக்காக, அரசியல்ரீதியில் பிரிந்து செல்லும் உரிமைக்காகப் போராட வேண்டியதேவை இருந்தாலும், அதற்கிடையில்"அதிர அடித்தால், உதிரவிளையும்"என்பதுபோல மாநிலங்களுக்கு ஆளுநர்களே தேவையில்லை என்கிற முழக்கத்தை நாம் உரக்க முன்வைத்து, இந்தியத் துணை கண்டத்தின் பல்வேறு தேசிய இனங்களும்,இந்தியத்திற்கு எதிராக, ஆளுநர்முறைக்கு எதிராக அதிர அடித்துக குரல் கொடுக்க வேண்டிய அவசியமிருக்கிறது என்பதை புரிந்துகொண்டு தமிழ்நாடு விடுதலை பேசும் இயக்கங்கள், தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் கைகோர்க்க வேண்டியகாலம் இது.

# கோகுல்ராஜ் கொலைவழக்கு - மூத்த வழக்கறிஞர் ப. பா. மோகன் அவர்களுக்கு வாழ்த்துகள்..

**வழக்கறிஞர் வெற்றி**

தமிழகத்தை உலுக்கிய கோகுல்ராஜ் கொலை வழக்கில் கீழமை நீதிமன்றம் வழங்கிய "இறுதி மூச்சு" வரையிலான சிறைத் தண்டனையைச் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை கடந்த 2/06/2023 அன்று உறுதி செய்தது.

சேலம் ஓமலூரைச் சார்ந்த 21 வயது பட்டியல் இனத்தைச் சார்ந்த பொறியியல் பட்டதாரியான கோகுல்ராஜ் சக தோழியான, இடைநிலைச் சாதியைச் சார்ந்த சுவாதியுடன் பழகி வந்ததை ஏற்க மனம் இல்லாத தீரன் சின்னமலைக் கவுண்டர் அமைப்பை நடத்தி வந்த யுவராஜ் மற்றும் அவனது கூட்டாளிகள் கோகுல்ராசுவைக் கோவிலில் இருந்து கடத்தி வதை செய்து மர்மமான முறையில் கொலை செய்துவிட்டு, கோகுல் ராஜாவையே வீடியோவில் பதிவாக்கியும் தற்கொலைக் குறிப்பை அவரிடம் இணைத்தும் ரயில் தண்டவாளத்தில் வீசிச்சென்றுள்ளனர்..

எவ்விதப் பெரிய ஆதாரமும் இல்லாத இந்தக் கொலை வழக்கில் இறுதியாக மேற்படி யுவராஜைக் காவல்துறைத் தேடிய நிலையில் 107 நாட்கள் தலைமறைவாகத் திமிராகச் சுற்றித்திரிந்து காவல்துறையை அலைக்கழித்துச் சாதி வெறியர்களுடன் சேர்ந்து வந்து கடந்த அக்டோபர் 11, 2015-இல் சரணடைந்தான்.. மேற்படி காவல்துறையை அலைக்கழித்ததன் காரணமாக, உயர் அதிகாரிகளின் தீவிர அழுத்தத்தின் நெருக்கடியால் இந்த வழக்கைக் கையாண்ட பட்டியல் சாதியைச் சார்ந்த இளம் காவல் துணைக் கண்காணிப்பாளர் விஷ்ணு பிரியா அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்.

இந்நிலையில் கோகுல்ராஜ் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட வழக்கில் யுவராஜ் உட்பட 15 பேரின் மீது இ.த.ச 120-பி 302, 364, 465, 468, 471, 212, 216, 201, 149 பிரிவின் கீழும் 3(2) Sc/St (POA) சட்டத்தின் கீழும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 725 பக்க குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கு sc no 31/2019 கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு மன்றம் மூன்று சிறப்பு நீதிபதி Sc/St வழக்கு மதுரையில் நடைபெற்றது. அரசுத் தரப்பில் 106 சாட்சிகளும் 550 ஆவணங்களும் அடையாளப்படுத்தப்பட்ட 107 ஆவணங்களும் குறியீடு செய்யட்டும், 9 நீதிமன்ற ஆவணங்களும் 2 நீதிமன்ற சாட்சிகளும் விசாரிக்கப்பட்டது. குற்றவாளிகளின் தரப்பிலும் ஆறு ஆவணங்கள் தங்களின் தரப்பிலும் குறியீடு செய்யப்பட்டது. அரசுத் தரப்பு சிறப்பு வழக்கறிஞராக மக்கள் வழக்கறிஞர் தோழர் ப. பா. மோகன் அமர்த்தப்பட்டார்.

இந்த வழக்கில் சாதி வெறியர்களுக்குத் தண்டனை பெற்றுத்தர கடுமையாக உழைத்தும் தன்னுடைய கூர்மையான வாதங்களை முன் வைத்தார். வழக்கு தொடக்கத்திலிருந்து இறுதிவரை கிடைத்த பல்வேறு சாட்சிய சான்றுகளையும் (சிசிடிவி காட்சி ஆதாரங்கள் உட்பட) முன்வைத்து வாதாடினார்.

முக்கிய சாட்சியான கோகுல்ராஜின் தோழி சுவாதி பிறழ் சாட்சியாக மாறிய போதும், சிசிடிவி ஆவணங்கள் மற்றும் சூழல் சாட்சிகளை அடிப்படையாகக் கொண்டு வாதாடியதன் விளைவாக யுவராஜ் உட்பட 10 பேர் குற்றவாளிகள் எனவும், "இறுதி மூச்சு வரை"சிறை தண்டனையை அனுபவிக்க கீழமை நீதிமன்றம் கடந்த 8-3-2022 அன்று தீர்ப்பளித்தது.

மேற்படி தீர்ப்பை எதிர்த்து யுவராஜ் உட்பட 10 பேரும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் குற்றவியல் மேல்முறையீட்டு மனு எண் ( மதுரை) 228, 230, 232, 233, 515, 536, 747 / 2022 என்ற வழக்கினைத் தாக்கல் செய்தனர். மேற்படி மனு பல்வேறு நாட்களில் நீதி அரசர்கள் எம். எஸ். ரமேஷ் மற்றும் ஆனந்த வெங்கடேசு ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்து பல நாட்கள் விசாரணை நடைபெற்றது. முக்கிய சாட்சியான சுவாதி பிறழ் சாட்சியாக மாறி சம்பவ நாளில் தான் கோவிலில் இல்லை வீட்டில் இருந்ததாகவும் உண்மைக்குப் புறம்பான வெளிப்படையான சிசிடிவி காட்சிகளின் உண்மைகளையும் மறுத்தார். இதனால் கோபமடைந்த நீதி அரசர்கள் சுவாதி மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையைத் தொடங்கினார்கள். மற்றொருபுறம் நீதி அரசர்களே அரிதினும் அரிதாக நேரில் சம்பவ இடத்தைச் சான்றுகளை ஆய்வு செய்யும் நடைமுறையைப் பின்பற்றி இறுதியாக கோகுல்ராசு, சுவாதி சென்ற கோவில், சிசிடிவி பதிவுகள், இடங்கள், ரயில் தண்டவாளம் ஆகியவற்றை நேரில் ஆய்வு செய்தனர். சுவாதி பிறர் சாட்சியாக மாறிய நிலையில் சிசிடிவி பதிவு உள்ளது கோகுல்ராசும் சுவாதியும்தான் என உறுதி செய்தனர். இந்த வழக்கில் நேரடி சாட்சிகள் இல்லாத நிலையில் கொலைக்கான காரணம், கோகுல்ராஜ் தற்கொலை செய்து கொண்டதாக அவரிடமே குறிப்புகளை வலுக்கட்டாயமாக உருவாக்கியது ஆகியவற்றை நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொண்டது.

குறிப்பாகக் கடைசியாகப் பார்த்த ஒன்பது பேருக்கும் தண்டனைக் குறைப்பு இல்லாத சாகும் வரையிலான சிறைத் தண்டனையை அனுபவித்தல் வேண்டும் என ஒரு (last seen theorem) கொலை செய்யப்பட்ட வரை இறுதியாக யார் சந்தித்தார்கள் அணுகினார்கள் என்ற கோட்பாட்டை அரசு தரப்பு விரிவாக எடுத்துரைத்தது.

பல கட்ட விசாரணை மற்றும் இருதரப்பு வாத பிரதிவாதங்களுக்குப் பிறகுக் கீழமை நீதிமன்ற உத்தரவுகளில் 13 14 குற்றவியல் ஆயுள் தண்டனையை ஐந்தாண்டுகளாகத் தளர்த்தியும் யுவராஜ் உட்பட மற்ற ஒன்பது பேருக்கும் தண்டனைக் குறைப்பு இல்லாத "சாகும் வரையிலான" சிறை தண்டனையை அனுபவிக்க வேண்டும் என ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினைக் கடந்த 2-06-2023 அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உறுதி செய்தது.

உயர்நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பாக எவ்வித முன்பகையும் கொலை செய்யப்பட்டவர் மீது குற்றவாளிகளுக்கு இல்லாத நிலையில், இந்த கொலை நடப்பதற்கு சாதியே காரணமாக உள்ளது எனவும், மேற்படி குற்றவாளிகள் மரண தண்டனை பெறவும் உரியவர்களாகவே இருந்துள்ளனர் எனவும் சாதி வெறியர்களுக்கு எதிரான நீதிமன்றம் சாட்டையை சுழற்றி உள்ளது.

ஆக சமூக சிந்தனையும், சமூக பற்றும் உள்ள மனிதனை மனிதனாக மதிக்கும் சிந்தனையை பெற்றவர்கள் நீதி அரசர்களாக இருந்தாலே போதும் சாதி வெறியர்களும், ஆதிக்க சாதிகளும் தற்காலிகமாவது அடங்கிப் போவார்கள் என்பதற்கு மேற்படி வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பே சான்றாகும்.

எண்ணங்களும் விருப்பங்களும் மட்டுமே தீர்வை வழங்காது. அவற்றை ஊக்கத்துடனும் உறுதியுடனும் அச்சமின்றி, அறிவுக் கூர்மையுடன் சமரசம் இன்றி உழைத்தாலே இலக்கை அடைய முடியும் என்பதற்கு தோழர் ப. பா. மோகன் அவர்களே சான்றாகும். தோழர் ப. பா. மோகனின் அளப்பரிய உழைப்பும் கூர்மையான அறிவும் இந்த வழக்கில் கொட்டிக் கிடக்கின்றது என்பதற்காக அவருக்கு நம்முடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

## தோழரும் வழக்கறிஞருமான இலிங்கன் நெஞ்சத் தாக்கத்தால் மறைவுற்றார் ..

**தமிழ்த்தேசிய அக்கறையோடு இயங்கிய மீனவக்குல மக்களின் உரிமைகளுக்காக ஓயாமல் சிந்தித்தும் செயலாற்றியும் வந்த அருந்தோழரின் இழப்பு தமிழினத்திற்குப் பேரிழப்புக்குரியது..**





தோழருக்கான நினைவேந்தல் நிகழ்ச்சியை அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம் வடசென்னையில் நடத்தியது.. தோழர்கள் தெய்வமணி, பிரின்சு கஜேந்திரபாபு, பாவேந்தன், வடிவாம்பாள், கௌதமன் உள்ளிட்டோர் உரையாற்றினர்

# அமைச்சர் செந்தில் பாலாஜியின் கைது என்கிற பெயரில் இந்திய பாஜக பாசிச அரசின் நடைமுறை, மாநில அரசுகளின் உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் வன்செயல்.

## இந்திய பாசிச பாஜகவின் திமிரைத் தமிழக மக்கள் முன்னணி கடுமையாகக் கண்டிக்கிறது.

இன்றைய முதலாளிய அரசியலில் ஊழல் என்பதும், முறைகேடு என்பதும் இந்திய நாடாளுமன்றம் தொடங்கி சந்து பொந்து வரை அனைத்துப் பகுதிகளிலும் நாற்றமெடுத்துக் கொண்டிருக்கிறது.

பார்ப்பனியமும், முதலாளியமும் அரங்கேற்றி இருக்கிற இந்த அதிகார அமைப்பை அப்படியே வைத்துக் கொண்டு ஊழல்களையும் முறைகேடுகளையும் எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது..

இந்திரா ஊழல்.. போபர்ஸ் ஊழல்.. கார்கிலின் சவப்பெட்டி ஊழல்.. ரபேல் போர் வானூர்தி ஊழல்.. என இந்திய அளவில் ஊழலில் மாறி மாறிக் கொழுத்தவர்கள் / கொழுத்து வருகிறவர்கள் காங்கிரசும் பாஜகவும்தான்.

இந்தப் பின்னணியில் தங்களின் அதிகார வெறி ஆட்டத்தைத் தட்டிக் கேட்க ஆள் இல்லை என்கிற திமிரில், பாசிச பார்ப்பனிய முதலாளிய வெறி கொண்ட பாஜக அரசு, மாநில அரசுகளைப் பந்தாடுவதும், வழிப்பறிக் கொள்ளை யடித்துச் சூறையாடுவதுமாக இருப்பதை அனைவரும் அறிவர்.

இதற்கேற்பத் தங்களின் வேட்டை நாய்களான அமலாக்கப் பிரிவு, என் ஐ ஏ, சிபிஐ போன்ற அதிகார அமைப்புகளை வைத்துக்கொண்டு, மாநில ஆட்சியாளர்கள் மீது அவற்றை ஏவிவிட்டுத் திமிராட்டம் போடுகின்றது இந்திய அரசு.

மாநிலங்களிலுள்ள கட்சிகள் எல்லாம் தூய்மையானவை என்றோ, முதலாளியத்திற்கு எதிரானவை என்றோ நாம் ஏற்கவில்லை. அவை யாவுமே பன்னாட்டு முதலாளிய அதிகார வகுப்பின் அங்கங்களே!

இருப்பினும், இவற்றின் அதிகாரப் பிடிகள் அனைத்தையும் இந்திய அரசு தன் கைக்குள் வைத்துக் கொண்டு, மாநிலங்களை அரட்டி உருட்டி அடிமைப்படுத்தி வைத்திருப்பதை நாம் ஒருக்காலும் ஏற்க முடியாது.

அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஊழல் நடைமுறையை நாம் எதிர்க்கிறோம். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் நடவடிக்கை எடுப்பதற்கான முறை சட்டத்திற்கும், சனநாயகத்திற்கும் உட்பட்டு இருக்க வேண்டும் என்பதிலும் அதுவும் இந்திய அதிகார வெறிப்போக்கோடு இருக்கக்கூடாது என்பதிலும் நாம் உறுதியாக வலியுறுத்துகிறோம்.

தவிரவும், தமிழ்நாட்டின் அமைச்சர் செந்தில் பாலாஜியையோ அல்லது அவரைப் போன்ற ஊழலில் ஈடுபடும் அமைச்சர்களையோ தண்டிப்பதற்குச் சில நெறிமுறைகள் உள்ளன.

ஆனால் அவற்றை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, துணை இராணுவப் படையை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டின் தலைமைச் செயலகத்தை இந்தியப் பார்ப்பனிய அரசின் துறைகள் முற்றுகை இடுவதை ஒரு கணமும் நாம் பொறுத்துக் கொள்ள முடியாது.

இது அப்பட்டமான பாசிச நடவடிக்கை. மேலும் மாநில அரசுகளின் உரிமையைக் காலில் போட்டு மிதிக்கும் வன்செயல்.

அவ்வகையில், அரசு நிறுவனங்களைத் தவறாகப் பயன்படுத்தும் இந்தியப் பாசிச அரசின் ஆணவப் போக்கு, எதிர்காலத்தில் தவறான முன் எடுத்துக்காட்டாக மாறிவிடும் என்பதைத் தமிழக மக்கள் முன்னணி சுட்டிக் காட்டி எச்சரிக்கிறது.

இப்படி அனைத்து வகையிலும் இன்றைய முதலாளிய சனநாயகத்திற்கேகூட எதிரான பாசிச பாரதீய சனதாக் கட்சியை வேரோடும், வேரடி மண்ணோடும் களைந்தெறிய மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் எனத் தமிழக மக்கள் முன்னணி அறை கூவல் விடுக்கிறது.

# ஒன்றிய அரசு கருத்துரிமையின் குரல்வளையை நெறிக்கிறது!

## கரிகாலன் போன்ற வலையொலி ஊடக நண்பர்களையும் பாதுகாப்போம்!

பாசிச பாஜக ஒன்றியத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்தே கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தங்களைப் பற்றியும். தங்களது கூட்டாளிகளான அம்பானி, அதானி ஆகியோரின் ஊழல்களைப் பற்றியும் பேசும் அரசியல் தலைவர்களுக்கும், சமூக செயற்பாட்டாளர்களுக்கும், ஊடகங்களுக்கும் பலவிதமான நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறது. அதேபோது, பாஜகவுக்கு ஆதரவாக செயல்படும் நபர்களுக்கும், ஊடகங்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே.

அந்த வகையில் பாஜகவின் மதவெறிக் கோட்பாட்டையும், எதேச்சதிகார அரசியலையும் மக்களிடம் தோலுரித்துக் காட்டும் வகையில் கரிகாலனின் ரூட்ஸ் தமிழ் வலையொளி ஊடகம் முற்போக்கு இயக்கங்களின் ஆதரவை வெகுவாகப் பெற்றிருந்தது. இதையறிந்த ஒன்றிய அரசு, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் மூலம் பல நெருக்கடிகளைக் கொடுக்கத் தொடங்கியது. அதன் முதற்கட்டமாக கடந்த மே மாதம் 16ஆம் நாள், ரூட்ஸ் தமிழ் ஊடகம் பதிவிட்டிருந்த எட்டு காணொலிகளை நீக்குவதற்கு வலையொளி நிர்வாகத்திடம் உத்தரவிட்டிருந்த நிலையில், அந்தக் காணொலிகள் நீக்கப்பட்டன.

**நீக்கப்பட்ட காணொலிப் பதிவுகள்:-**

1) யாரெல்லாம் தமிழர்கள் என்ற தலைப்பில் பாவலரேறு தமிழ்க்களத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் தோழர் பொழிலன் அவர்கள் ஆற்றிய உரை.
2) "வள்ளுவர் நெறியில் வள்ளலாரை அறிவோம்" என்ற தலைப்பில் அடையாறு முத்தமிழ் அரங்கத்தில் நடைபெற்ற வள்ளலாரின் 200 ஆம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்ச்சியில் பேராசிரியர் செயராமன் அவர்கள் ஆற்றிய உரை.
3) திமுகவின் துணைப் பொதுச் செயலாளர் திரு ஆ.இராசா அவர்களின் மனுஸ்மிருதி குறித்த உரைக்கு எதிராக பாஜகவினர் உருவாக்கிய சர்ச்சைக் குறித்து திமுகவின் மாணவர் அணி அமைப்பாளர் திரு இராசிவ் காந்தி அவர்களுடனான நேர்காணல்.
4) மனுஸ்மிருதி குறித்து மே 17 இயக்கத் தோழர்கள் திரு. பிரவீன் குமார், திரு. கொண்டல்சாமி ஆகியோரின் பொதுக்கூட்ட உரை.
5) "பெரியாரின் திராவிட மாடல்" என்னும் தலைப்பில் தோழர் தியாகுவின் கருத்தரங்க உரை.
6) அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம், என்ற தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவுக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றம், மதுரைக் கிளையின் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனின் தீர்ப்பு குறித்து "கருவறைத் தீண்டாமை" என்ற தலைப்பில் திராவிடர் கழகத் துணைத் தலைவர் திரு. கலி. பூங்குன்றன் அவர்கள் உரை.
7) மேற்கண்ட நீதிபதி சுவாமிநாதனின் தீர்ப்புக் குறித்து தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர் சீனி. விடுதலைஅரசு அவர்கள் ஆற்றிய உரை.
8) பகவத் கீதையா? / திருக்குறளா? தலைப்பில் பேராசிரியர் மனிக்கோ பன்னீர்செல்வம் அவர்களுடன் நேர்காணல் நடத்தியது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இந்த எட்டு காணொலிகளில் பேசியவர்கள் யாரும் குற்றவாளிகளோ, தடை செய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்தவர்களோ கிடையாது. அவர்கள் பேசியதும் முரணான கருத்துகள் கிடையாது. ஆனால் பாசிச சிந்தனை கொண்ட இந்த அரசுக்கு முரணாகத் தெரிகிறது. ஆகையால் அந்தக் காணொலிகளை நீக்கிவிட்டது.

இந்த நிலையில் தோல்வியின் விளிம்பில் நிற்கும் பாஜக, ஒன்றிய அரசின் தோல்விகளை மறைக்க, தங்களுக்கு எதிரானக் கருத்துகள் மக்களிடம் சென்று சேர்ந்துவிடக்கூடாது என்ற நிலையில் தோழர் கரிகாலனின் ரூட்ஸ் தமிழ் வலைத்தளத்தை முற்றிலுமாக முடக்கியுள்ளது.

மனந்தளராத தோழர் கரிகாலன், தனது வலையொளித்தளம் முடக்கப்பட்ட நிலையிலும் தனது கருத்துப் பரப்பல்கள் முடங்கி விடக்கூடாது என்ற நிலையில் ரூட்ஸ் 24×7 என்ற புதிய ஊடகத்தை அறிமுகப்படுத்தி முன்னைவிட பலமடங்கு வேகத்தில் இயங்கத் தொடங்கினார். மிரண்டு போன ஒன்றிய அரசு, "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாம்" என்ற முதுமொழிக்கேற்ப அச்சத்தின் உச்சிக்கே சென்று விட்டது. அதன் விளைவு 21-06-2023 அன்று தோழர் கரிகாலனின் புதிய ஊடகத்தையும் முடக்கி விட்டது.

ஒன்றிய அரசின் இத்தகைய அதிகாரத் திமிரை இப்படியே நீடிக்கவிடக்கூடாது, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தேவையான நடவடிக்கைகளை உடனே எடுத்தாக வேண்டும். பாதிக்கப்பட்ட தோழர் கரிகாலனின் உரிமைகளை வென்றெடுக்க சனநாயக ஆற்றல்கள் அவருக்குப் பக்கவலுவாக இருந்து செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்..

**தமிழ்முகம்**

வெளியீட்டுக் குழு : **பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்**

**தமிழ்நாடு** (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874

**(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்)** **மின்னஞ்சல்** : thamizhnadu2051@gmail.com

அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005